**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.94/2016**

பெயர்-திரு. பொன்னுசாமி நாள்.26.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) எனது தாத்தா சின்ன மாரநாயக்கர் 1957 ல் எனது அண்ணன் மல்ல நாயகருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார். அசல் உயில் ஆவணத்தை மாண்பமை மாவட்ட நீதிமன்றம் கோபிசெட்டிபாளையத்தில் தாக்கல் செய்துள்ளோம். இந்நீதிமன்றத்தில் உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில் ஆவணத்தின் அசலை கோபிசெட்டிபாளையம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக இவ்வழக்கின் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் உயில் ஆவணத்தை பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. அசல் உயில் ஆவணம் எனது கைவசம் இல்லை என்றால் சரிதான். அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை என்னால் நடத்த முடியாது என்றால் சரியல்ல. எனது அண்ணன் மல்ல நாயக்கர் 1957 ஆம் வருடத்தில் இறந்தார். எனது தாத்தா சின்னமார நாயக்கரும் 1957 ல் இறந்தார். முதலில் எனது தாத்தா இறந்தார் அதன் பின்பு எனது அண்ணன் இறந்தார். உயில் ஆவணத்தில் என்ன வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலை யார் யார் எழுதி தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2) உயில் கைப்பட எழுதப்பட்டதா அல்லது டைப் செய்யப்பட்டதா என்றால் வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்த பின்பு தான் எனக்கு தெரிந்தது. கைப்பட எழுதப்பட்ட உயில் ஆகும். மேற்படி உயிலில் சொத்துக்கள் இனாம் சொத்துக்கள் என்றும் மேல்வாரத்திற்கும் குடிவாரத்திற்கும் பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது அப்பா பெரியமாரநாயக்கர் பெயரில் பட்டா மாறுவதற்கான 1957 ஆண்டு உத்தரவு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அ-பதிவேட்டில் 1957 ஆம் ஆண்டுக்குப் பிறகு எனது அப்பா பெரிய மாரநாயக்கர் பெயரில் உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1957 க்கு பின்பு எனது அப்பா பெரிய மாரநாயக்கர் பெயரில் உள்ள கந்தாய இரசீது செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. 14.01.1957 தேதியில் தாவா சொத்தை

பொறுத்து எனது தாத்தா சின்ன மாரநாயக்கர், எனது அண்ணன் மல்லநாயகருக்கு உயில் எழுத உரிமை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) மேலும் எனது தந்தைக்கு தாவா சொத்தின் ஆயுள் பாத்தியம் வழங்கி உயில் எழுதுவதற்கு எனது தாத்தாவிற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து 14.01.1957 ம் தேதியில் என் தாத்தா எழுதிய உயில் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது, செல்லாது என்றால் சரியல்ல. 1963 தமிழக அரசு இனாம் ஒழிப்பு சட்டம் கொண்டு வந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த காலகட்டத்தில் வருவாய் துறைகளில் ஏ பதிவேடு மற்றும் பி பதிவேடு பராமரித்து வந்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. இனாம் சொத்துக்கள் அனைத்தும் வருவாய் துறை ஆவணங்களில் பி பதிவேட்டில் பதியப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்ததா என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் ரயத்து வாரி சொத்துக்களை பதிவேட்டில் பராமரித்து வந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1963 இனாம் ஒழிப்புச் சட்டத்திற்கு பிறகு ரயத்து வாரி சொத்துக்கள் அனைத்தும் ஏ பதிவேட்டில் பராமரித்து வருகின்றார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தான 118/2 பழைய க.ச.169 சொத்து T.D.No.118 தொட்டி இனாம் ஆக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்தின் 118/2 மற்றும் 118/3 சொத்து சின்ன மாரநாயக்கார் குடிவாரமாக உழவு செய்து வந்த சொத்தாக காட்டப்பட்டுள்ளதாக என்றால் எனக்கு தெரியாது.

4) எனது அப்பா பெரிய மாரநாயக்கர் சொத்து க.ச.118/4 ல் குடிவாரமாக கூட்டு சொத்தாக ஓட்டி வந்தார்கள் என்றால் இல்லை. தனியாகத்தான் அனுபவித்து வந்தார். 12.02.1969 இனாம் ஒழிப்பு சட்டத்தில் கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் குடிவாரமாக ஓட்டி வந்த நிலங்களை அதை ஓட்டி அனுபவித்து, அதே நபர்களுக்கு ரயத்து வாரி பட்டா வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு எனது அப்பா பெரியமாரநாயக்கர், எனது சித்தப்பா சின்னமாரநாயக்கருக்கு அறிவிப்பு அனுப்பி, விசாரணையில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளனர் என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி விசாரணையில் எனது சித்தப்பா சின்ன மாரநாயக்கர் வா.சா.1 ஆகவும், எனது அப்பா பெரியமாரநாயக்கர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டார் என்றால், எனக்கு தெரியாது. இனாம் பி பதிவேடு C1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5) இதற்கு முன்பு வருவாய்த்துறை அலுவலகத்தில் மணியக்காரர் மற்றும் கர்ணம் என்ற இரண்டு நபர்கள் பணியில் இருந்தார்கள், என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வருவாய் துறை ஆவணங்களை கர்ணம் தான் பராமரித்து வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்தை பொருத்து கர்ணம் என்பவர் நீதிமன்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டு தாவா சொத்தை பிரதிவாதிகளின் தந்தை சின்ன மாரநாயக்கர்

குடிவாரமாக அனுபவித்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. 12.02.1963 ல் பிரதிவாதியின் தந்தை சின்ன மாரநாயக்கருக்கு தாவா சொத்து ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விசாரணையில் ஆஜரான எனது அப்பா பெரியமாரநாயக்கர், தாவா சொத்திற்கு சின்ன மாரநாயக்கர் பெயருக்கு ரயத்துவாரி பட்டா வழங்கியது, எவ்வித ஆட்சேபணையும் கூறவில்லை என்றால், எனக்கு தெரியாது. 12.0 2.1969 விசாரணையில் எனது அப்பா சின்ன மாரநாயக்கரின் குடிவாரத்தை ஏற்றுக் கொண்டுதான், ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 12.02.1969 உத்தரவுப்படி தாவா சொத்து எனது சித்தப்பா சின்ன மாரநாயக்கருக்கு தான் சர்வ சுதந்திரமாக பாத்தியபட்டது என்றால் சரியில்ல. அதனால்தான் எனது தந்தை பெரிய மாரநாயக்கர் பெயரில், தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

6) தாவா சொத்து தொடர்பாக எனது அப்பா பெரிய மாரநாயக்கர் உயிரோடு இருந்த பொழுது, பிரதிவாதிகள் மீதும் அவரது தந்தை மீதும் வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சின்ன மாரநாயக்கருக்கு பாத்தியப்பட்டது என எனது அப்பாவுக்கு தெரிந்ததால் தான், எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. தாவா சொத்தை சின்ன மாரநாயக்கர் இறக்கும் வரை அவர் தான் ஓட்டி வந்தார் என்றால் இல்லை. நாங்கள் தான் ஓட்டி வந்தோம். சின்ன மாரநாயக்கரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் அவரது மகள் மனைவி மற்றும் மகளுக்கு பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தாவா சொத்தை நானும் எனது தந்தையும் அனுபவித்து வந்ததாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் தான் ஓட்டுகிறோம். எனது வழக்குரையில், நான் அனுபவித்து வருவதாக எந்த இடத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. 1985 க்கு பின்னிட்டு தாவா சொத்தின் அனுபவம் 1-ம் பிரதிவாதி திம்மக்காளிடம் இருந்தது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதிடமிருந்து தாவா சொத்தின் சுவாதீனத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கு தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் இருந்தபோது, 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி 2025-ல் தான் இறந்தார்.

7) வழக்கில் நானும் எனது சகோதரரும் கோபிசெட்டிபாளையம் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.594/1985 வழக்கு தாக்கல் செய்து, தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். அதே நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி எங்களுக்கு எதிராக 641/1985 என வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அ.வ.எண்.594/1985 வழக்கில் 1ம் பிரதிவாதியின் மகள்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் இல்லை திருமணமான மூன்று நபர்களை விட்டுவிட்டு திருமணமாகாத நான்கு மகள்களை தரப்பினராக சேர்த்து வழக்கு

தாக்கல் செய்துள்ளோம். சாட்சி தற்போது வா.சா.ஆ.7 ஐ பார்த்துவிட்டு திம்மக்காளுக்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார். மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை நானும், எனது சகோதரர் மற்றும் திம்மக்காள் ஆகியோர்கள் மட்டும் தரப்பினராக உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சமரச தீர்ப்பாணையில் 2 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி திம்மக்காளுக்கு எழுதப்படிக்க தெரியாது, கைரேகைதான் வைப்பார் என்றால், சரிதான்

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது மீண்டும் குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.26 04:17:57 +0530

District Munsif